**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 181 /2016

PW-4 17-10-2024

| | |
|---|---|
| Name | மூர்த்தி |
| Father's/Husband's Name | அழகர்சாமி |
| Village | கோவில்பட்டி |
| Taluk | கோவில்பட்டி |
| Caste | _ |
| Calling | மார்க்கட்டிங் |
| Religion | _ |
| Age | 34 |

(A1 to A3 absent. Petition filed and allowed)

<u>**முதல்விசாரணை**</u>

1) நான் கோவில்பட்டியில் வசிக்கிறேன். நான் மார்க்கட்டிங் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள மூர்த்தி என்ற கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்தை 21.04.2016 ம் தேதி மாலை 6 மணிக்கு மேல் சம்பவ இடத்தில் வைத்து போலிசார் விசாரித்து என்னிடமும் என் மாமா மாரியப்பனிடமும் கையொப்பம் வாங்கினார்கள். **அந்த பார்வைமகசர் முழுவதும் அசா ஆ 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) இவ்வழக்கின் புகார்தாரர் என் உடன் பிறந்த தங்கையாவார். நான் பாரதிநகரில் வசிக்கிறேன். சம்பவ சமயத்தில் அசா 1 எங்களுடன் குடியிருந்து வந்தார். கையெழுத்து போட்ட தேதியில் மாலை 6 மணிக்கு மேல் வீட்டிற்கு வந்தேன். போலிசார் சம்பவத்தன்றே என்னை விசாரித்தார்.

2) நான் கையெழுத்து போட்ட பேப்பரில் போலிசார் என்ன எழுதியிருந்தார்கள் என்று

எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்னமாதிரி சொன்னநேரத்தில் பார்வைமகசரில் கையெழுத்திட்டதாக சொல்வது பொய் என்றாலும் காவல்நிலையத்தில் வைத்துதான் போலிசார் தயாரித்தாக சொல்லப்படும் பார்வைமகசரில் கையெழுத்து போட்டேன் என்றாலும் சரியல்ல. அசா 1 என் தங்கை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.